முருகப்பெருமான் துணை

# மகான் கண்ணப்ப நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

30.11.2021, செவ்வாய்கிழமை

1. தவசக்தியே ஆறுமுக அரங்கா
தனித்துவமிக்க ஞான தேசிகா
அவதாரம் புரிந்த வள்ளலே
அண்ணலே உன்பெருமை கூறி
2. கூறியே பிலவ தேளின் திங்கள்
குறைவிலா முன்னான்கீர்திகதி குசன்வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 14ம் நாள், 30.11.2021, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகனுக்கு கண்ணப்ப நாயனார்யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயிர்பலி செய்து கலியுகத்தில்
ஞானமிலா நடக்கும் மக்களுக்கு
நாட்டிடுவேன் எச்சரிக்கை தானும்
4. தானுரைக்க பிணி சோடையென
தகாத ஆயுதகண்டம் அல்லல்
வானத்திலிருந்து இடி தாக்கம்
வாகன கண்டம் பேரிடர் எனும்
5. எனும் துன்பம் பலவாற் கூடி
ஏழ்மை இயலாமை எனும் சோடை
ஞானமிலா மக்கள் அடைவர்
ஞானிகளை வணங்கா வழி தெரியா
6. வழிதெரியா தவிப்பும் கூடியே
வளர்ச்சி இன்றி முடங்குவர்
அழிவெனும் பாதை தெரிந்தும்
அகலாது மதுமாது சூது என திளைப்பவர்
7. திளைப்பவர் தேற்றம் காண
தேசிகன் காட்டும் தெய்வநெறிஏற்க
பிழைப்பர் பின்னடைவு இன்றி
பிரணவ சூட்சும சக்தி கூடியே
8. கூடியே நல்ல பாதுகாப்பும்
குறைகள் விலகி பக்குவமும்
நாடியே ஞான முதிர்ச்சியும்
ஞான தேசிகன் தீட்சைபலத்தால்
9. பலத்தால் பரோபகாத்தன்மையும்
பசிபிணி விரட்டும் சித்தியும்
பலமான ஆயுள் கீர்த்தியும்
பாதுகாப்பான வாழ்வாதாரம் பெருகி

10. பெருகியே அரங்கன் தேடும்
பெருமை மிக்க ஞானவான்களாகி
முருகப்பெருமான் அருளும் தயவும்
முழுமையும் கண்டு சிறப்பர்

11. சிறப்பறிவு தந்தருளும் ஞானி
சிவராஜ யோகி அரங்கனை
மறுப்பின்றி ஏற்க இந்தஉலகம்
மாண்புமிக்க ஞான உலகமாகும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–